**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.84/2022

பெயர் : வாஞ்சிநாதன் (DW1) (Cross)

த/க/பெ. :

தேதி :04.08.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி இடத்தில் நான் வீடு கட்டியிருப்பதாக இந்த வழக்கு போட்டுள்ளார். வேறு பரிகாரம் எதுவும் கேட்டுள்ளதாக என்பது தெரியவில்லை. சர்வே எண். 45/8, 45/4, வழக்கு போட்டுள்ளார். இரண்டு சர்வே எண் மட்டும் தான் என்றால் அது தான் எனக்கு தெரியும். எதிர்வழக்குரையில் 20.05.1963 ல் வாதிக்கு அம்மனியம்மாள் உயில் எழுதி வைத்ததை ஒப்புக் கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி உயில் தான் வா.சா.ஆ. 4 என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொருத்து வாதி பெயரில் பட்டா வா.சா.ஆ. 1 உள்ளதை தெரிந்துக் கொண்டேன் என்றால் ஏமாற்றி வாங்கியது. பட்டாவை ரத்து செய்ய இதுநாள் வரை நடவடிக்கை எடுத்தேனாஎ ன்றால் 2021 ல் கூப்பிட்டுக் கேட்டோம் அதற்குள் வழக்கு போட்டுவிட்டார். இந்த விபரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பட்டா மோசடியாக வாங்கப்பட்டது என்று சொல்கிறேன் என்றாலும் அனுபவத்தை அனுசரித்தும் உயிலை அனுசரித்தும் வாதிக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நிர்வகிக்க வாதி என்னிடம் ஒப்படைத்தார் என்றால்சரியல்ல. 26.07.2022 ல் தாவா சொத்தை நான் முறையாக நிர்வாகம் செய்து கணக்கு ஒப்படைக்காததால் வாதி எனக்கு அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. என் எதிர்வழக்குரையில் வா.சா.ஆ 2 அறிவிப்பு வரவவில்லை என்று நான் மறுக்க வில்லை என்றால் சரியல்ல. வா.சாஆ. 2 ன் படி எனக்கு அளிக்கப்பட்ட அனுமதியை வாதி ரத்து செய்து விட்டதால் தாவா சொத்தை பொருத்து நான் ஆக்கிரமிப்பாளர் என்றால் சொத்து என்னிடம் இல்லை. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களின் 600 சதுரடி ரோட்டின் தென் புறம் நான் துத்து செட் போட்டுள்ளேன் என்றால் குமாரசாமியிடம் இருந்து நான் வாங்கிய இடத்தில் தான் போட்டுள்ளேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு நான் வாய்மொழியாக வாங்கினேன். அதற்கு குமாரசாமியின் பேரன் வெங்கடேசன் சாட்சி. எதிர்வழக்குரையில் இந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். பதிவு சட்ட படி 100 ரூபாய்க்கு மேல் ஒரு இடத்தை வாங்கினால் அதை பதிவு செய்ய

வேண்டும் என்ற விதிமுறை தெரியுமாஎன்றால் தெரியாது. வழக்கிற்காக தான் குமாரசாமியிடம் இருந்து வாய்மொழியாக வாங்கியதாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாபறு நான் வாங்கியிருந்தால் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 2 ன் படி எனக்கு அளிக்கப்பாட்ட அனுமதியை வாதி ரத்து செய்து விட்டதால் நான் 1, 2 அயிட்ட சொத்துக்களில் ஆக்கிமித்து கட்டிய செட்டை காலி செய்து கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சொத்து வாதியுடையது அ ல்ல. எதிர்வழக்குரையில் சொல்லி உள்ள விபரங்களை நீரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் கூறியுள்ள கட்சி பொய்யானது என்றாலும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்தை வாதி அவர் சகோதரர் விஜயக்குமாரிடம் வாய் மொழியாக கிரயம் பெற்றததால் தான் வா.சா ஆ. 1 பட்டா வாதி பெயில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1, பட்டா வா.சா.ஆ. 4 உயில் படி வாதி உரிமையார் என்பதை நிரூபித்துள்ளார் நான் வசம் கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்து வாதி உரிமைமூலம் வைத்துள்ளார் என்றாலும் நான் சுவாதீனம் ஒப்படைக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இதுநாள் வரை தாவா சொத்தை பொருத்து சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் 45 /8 பொருத்து நான் உரிமை கோரவில்லை. அதன் உரிமையார் ராஜலெட்சுமியம்மாள் என்னை பார்த்துக் கொள்ள சொல்லி உள்ளார்கள். என் எதிர்வழக்குரையில் இந்த விபரத்தை சொல்லவில்லை. தாவா சொத்துக்களுக்கு 2020, 2021, 2022 கணக்கு ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை என்னிடம் ஒப்படைக்காததால் தான் வா.சா.ஆ. 2 அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் எதிர்வழக்குரைக்கு விரோதமாக என் சாட்சியம்இருப்பதால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால்சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.